## தலைப்பு 206 – கலாசார அலுவல்கள் திணைக்களம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 யூன் 06 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தித்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 யூன் 10 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ)பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 கணக்குகளைத் சமர்ப்பித்தல்**

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வருடாந்த நிதிக்கூற்றுக்கள் | | |
| 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் 2019 பெப்ரவரி 28 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அது 01 மாதம் 23 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2019 ஏப்ரல் 23 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | வருடாந்த நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | திறைசேரியால் மாதிரிப் படிவம் மற்றும் சுற்றறிக்கை மூலம் மாதிரி படிவங்களை அவ்வப் போது மாற்றுவதால் இவ்வாறு தாமதம் ஏற்படுகின்றது. |

### 1.6.2 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையுடன் இணங்க வேண்டியிருந்த போதிலும் திணைக்களத்தினால் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட 04 கணக்கு விடயங்கிளன் பெறுமதியை அடிப்படையகக் கொண்டு இல்லாமையால் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கிடையே வேறுபாறுகளின் கூட்டுத்தொகை ரூபா 30,513,101 ஆக இருந்தது. | நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் திறைசேரி அச்சீட்டுக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்ட எண்ணிக்கையுடன் ஒப்பீடு செய்யப்பட வேண்டும். | எதிர்காலத்தில் கணக்கு தயாரிக்கம் போது குறைபாடுகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 1.6.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிதிநிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் பணிப்பாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் 8.2 பந்தியின் பிரகாரம் மேலும் அறிக்கையிடப்பட வேண்டிய நிதியல்லாத சொத்துக்கள் இருந்தால் அவற்றை சரியாக இனங்கண்டு கிரயத்திலோ அல்லது கிரயத்தை இனங்காண முடியாதிருந்தால் மதிப்பிடப்பட்ட பெறுமதிக்கு கணக்கீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திணைக்களத்திற்கு சொந்தமான 6 கட்டிடங்கள் ரூபா 53,400,000 கிரயத்திலான 14 வாகனங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத | திணைக்களத்திற்கு சொந்தமான அனைத்து நிதியல்லாத சொத்துக்கள் இனங்காணப்பட்டு கிரயம் அல்லது மதிப்பிடப்பட்ட பெறுமதி அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட வேண்டும். | சகல வாகனங்களும் விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன் தகவல்கள் கிடைத்ததன் பின்னர் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | 3 வாகனங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) | மீளாய்வாண்டில் கையேற்கப்பட்ட ரூபா 77,609,296 பெறுமதியான சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | நிலையான சொத்துக்கள், அரச கணக்குகள் திணைக்களத்தின் வாய்மொழி அறிவுறுத்தல்களின் பிரகாரம் வம்பர் மாதத்தின் போது பூச்சியமாக்கப்பட்டதுடன் உறுதிப்படுத்தப்பட்ட புள்ளி விபரங்கள் அடிப்படையில் கணக்கீடு செய்யப்படும். |
| (iii) | மீளாய்வாண்டில் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட தளபாடங்கள் மற்றும் உபகரண அலகுகள் 28 இன் கிரயப் பெறுமதி நிதியல்லாத சொத்துக்கள் கூற்றில் சொத்துக்கள் கைதவிர்ப்பின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டில் கைதவிர்க்கப்பட்ட சொத்துக்கள்நிலையான சொத்துக்கள் மீதியிலிருந்து கழித்துக் காண்பிக்கப்பட வேண்டும். | - மேற்படி - |

**(ஆ) காசுப்பாய்ச்சல் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தும் முதலீட்டு செயற்பாடுகளிகிலிருந்தும் உருவாகிய காசுப் பாய்ச்சலில் உள்ளடக்கப்பட்ட செலவினங்களின் தொகையில் காசல்லாத கொடுக்கல் வாங்கல்கள் உள்ளடக்கப்பட்டிருந்தன. | காசுப் பாய்ச்சல் தயாரிக்கப்படும் போது ஆண்டினுள் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்களில் காசாக பெறுவனவு மற்றும் காசாக கொடுப்பனவுகளில் தாக்கம் மாத்திரம் நிரூபணமாக வேண்டும். | வரவுப் பதிவொன்று உள்ளடக்கப்பட்டு கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. |
| (ii) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காசுப் பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு மற்றும் முதலீட்டு செயற்பாடுகளகிலிருந்தும் உருவாகிய காசுப் பாய்ச்சல் பூச்சியமாக இருக்க வேண்டிய போததிலும் அது ரூபா 88,278,920 என குறிப்பிடப்பட்டிருந்தது. | தொழிற்பாடு, முதலீடு மற்றும் நதி செயற்பாடுகளிலிருந்து உருவாகிய தேறிய காசுப் பாய்ச்சல்களின் கூட்டுத்தொகை பூச்சியமாக காட்டப்பட வேண்டும். | வரவுப் பதிவொன்று உள்ளடக்கப்பட்டு கணக்கில் காண்பிக்கப்பட்டுள்ளது. |

## 1.6.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்க கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் வரவு மீதி மற்றும் திறைசேரி அச்சீட்டுக் குறிப்பின் பிரகாரம் வரவு மீதிக்கு இடையே ரூபா 444,761 ஆன வேறுபாடொன்று காணப்பட்டது. 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் இருந்து வரும் இவ்வேறுபாட்டிற்கு காரணங்கள் தெளிவு படுத்தப்பட்டிருக்கவில்லை. | முற்பணக் கட்டுபாட்டுக் கணக்கு மற்றும் திறைசேரி கணனி அறிக்கையின் பிரகாரம் வரவு மீதியில் வேறுபாடொன்று இருந்தால் 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தெளிவுபடுத்தப்பட வேண்டும். | தேவையான தகவல் இல்லையென்பதால் கண்டுபிடிப்பதில் சிக்கலாக இருந்தது. |
| (ஆ) | தனியால் மீதிகள் வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை மற்றும் திணைக்கள கட்டுப்பாட்டுக் கணக்கின் மீதிகளுக்கு இடையே ரூபா 450,507 வேறுபாடாக இருந்ததுடன் அதில் ரூபா 95,908 ஆன வேறுபாட்டிற்கு காரணங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | தனியால் மீதிகள் வகைப்படுத்தல் மற்றும் திணைக்கள கடன் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கின் வேறுபாடு இனங்காணப்பட்டு தீர்வு செய்யப்பட வேண்டும். | இவ்வேறுபாடு இனங்காணப்பட்டதும் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | முன்னைய ஆண்டின் போது இடமாற்றம் பெற்றுச்சென்ற, ஓய்வுபெற்ற மற்றும் சேவையை விட்டுச்சென்ற உத்தியோகத்தர்கள் மற்றும் 04 ஊழியர்களிடமிருந்து ரூபா 239,639 ஆன கடன் மீதி மற்றும் முற்பண மீதிகள் தனியால் மீதிகள் அட்டவணையில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை மீதிகள் அனைத்தும் தனியால் மீதிகள் அட்டவணையில் காண்பிக்கப்பட வேண்டும். | திணைக்களம் மற்றும் மூலாதாரங்களில் தேவையான தகவல்கள் இல்லையென்பதால் தகவல் தேடிக்கொண்டதன் பின்னர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |

**1.6.5 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கிடைக்கப் பெற்ற காசோலைகள், காசுக் கட்டளைகள் என்பவற்றுக்கான பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 451 இன் பிரகாரம் காசோலைகள், காசுக் கட்டளைகள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் பதிவேடொன்று பேணப்பட்ட வேண்டும். | குறைபாடுகளை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | பிணைகள் பதிவேடு | | |
| | நிதிப்பிரமாணம் 891(1) இன் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் தகவல்கள் உள்ளடங்கிய பிணைகள் பதிவேடொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை. | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்கள் தொடர்பான பிணைப் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களை இனங்காணுதல் மற்றும் பதவிகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய அளவு என்பன தாபன பணிப்பாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன் பதில் கிடைத்ததன் பினன்ர் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | **வாகன நிரட்படுத்தும் பதிவேடு** | | |
| | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை . | நிதிப்பிரமாணம் 1647(உ) இன் பிரகாரம் வாகன நிரட்படுத்தும் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் பதிவேடொன்று பேணிச்செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

**1.6.6 கணக்கீட்டு உத்தியோகத்தரால் மேற்கொள்ளப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்கள்**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரால் கீழே காட்டப்பட்ட விடயங்கள் தொடர்பாக சான்றுறுதிப்படுத்த வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள நிதிக் கட்டுப்பாட்டிற்காக செயற்திறனான உள்ளக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் | குறைபாடுகளை சீர்செய்வதற்கு தேவையான நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணிச் செய்யப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம் முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்வது அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற ˙கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் இடம் பெற வேண்டிய போதிலும் அம் மீளாய்வு எழுத்து மூலம் மேற்கொள்ளப்பட்டு அதன் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும் அவ்வாறான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | வருடாந்த மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான நேரத்தில் தயாரித்தல் இடம் பெறுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தரால் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அதற்கு மேலதிகமாக கணக்காய்வு செய்யப்படும் நிறுவனத்திற்குரிய வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கு பிரதான கணக்கீட்டு உத்தியோதத்தர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டிய போதிலும் 3.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புக்கள் காரணமாக அத்தேவைப்பாடு நிறை வேற்றப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | திறைசேரியால் மாதிரிப் படிவம் மற்றும் சுற்றறிக்கை மூலம் மாதிரி படிவங்களை அவ்வப் போது மாற்றுவதால் இவ்வாறு தாமதம் ஏற்படுகின்றது. இறுதியாக 2019 மார்ச் 26 ஆந் திகதி விநியோகிக்கப்பட்டிருந்தது. |
| (இ) | உள்ளகக் கணக்காய்வு செயற்பாடு முறையாக செயற்படுத்துவதற்காக அக்கபூர்வமான நடைமுறையொன்று காணப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு | - மேற்படி - | குறித்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது எதிர்வரும் நடவடிக்கைகள் எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ளது. |

உத்தியோகத்தர் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அறிக்கையின் 4.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் அத் தேவைப்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

### 1.6.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமை | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை | | | | |
| (i) XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவு | 311,957 | மரணித்த, வேலை இடை நிறுத்தம் செய்யப்பட்ட, சேவையை விட்டுச்சென்ற மற்றும் இனங்காணப்படாத உத்தியோகத்தர்களிடமிருந்து 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நிலுவை கடன் மீதிகள் அறவிடப்பட்டிருக்க வில்லை. | தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வரும் நிலுவை கடன் மீதிகள் அறவிடுவதற்கு திணைக்களத்திடம் தகவல்கள் காணப்படாமையால் கடன் மீதிகளை அறவிடமுடியாதிருந்தது. |
| (ii) XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவு | 24,652 | தெரிவுப் பரிசோதனையின் போது 52 உத்தியோகத்தர்களின் கடனுக்காக 9 நாட்கள் முதல் 131 நாள் காலப்பகுதிக்காக வட்டி அறவிடப்பட்டிருக் கவில்லை. | தாபன விதிக் கோவை XXIV ஆம் அத்தியாயத்தின் 3.7 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கடன் தொகை வழங்கிய திகதி முதல் குறித்த அளவில் வட்டியை அறவிடுவதற்கு எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | | |
| (i) நிதிப் பிரமாணம் | | காசு இருப்பதாகவும் | நிதிப் பிரமாணம் | குறைபாடுகளை சீர் |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 214 | | பட்டியல் அவசரமாக தீர்ப்பதாகவும் உறுதிப் படுத்தும் பொருட்டு பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு பரீட்சிக்கப்பட்டிருக்க வில்லை | 214 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |
| (ii) | நி.பி 565(4) | | ஒரு நிதியாண்டிற்காக புதிய வைப்பு பதிவேடு திறக்கப்பட வேண்டிய போதிலும் வருடக் கணக்காக அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணம் 565(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019 ஆம் ஆண்டு முதல் புதிய வைப்பு பதிவேடு திறக்கப்பட்டுள்ளது. |
| (இ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பந்திகள் | 90,568 | இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர் களிடமிருந்து கடன் மீதிகள் 02 மாதங் களுக்குள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டிய போதிலும் 23 உத்தியோகத்தர்களிடமிருந்து குறித்த கடன் மீதிகளுக்குரிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக தீர்வு செய்யப்படாதிருந்தன. | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க தேசிய பாதீட்டு சுற்றறிக்கையின் 1.1.6 மற்றும் 1.1.7 ஆம் பந்திகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | தீர்வு செய்வதற்குரிய சம்பள விபரங்கள் தாமதமானமையால் அவ்வாறு இடம்பெற்றுள்ளது. |
| (ஈ) | 2017 யூலை 05 ஆந் திகதிய 256/2017 ஆம் திகதி அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி | - | அரச உத்தியோகத்தர் களின் முற்பணக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்று மாத்திர இலக்கம் 3.2 முதல் 3.10 வரை மற்றும் 05 ஆம் இலக்க மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட வேண்டும். | அரச கணக்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறித்துரைக்கப்பட்ட மாதிரியின் பிரகாரம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 18 செலவின விடயங்களுக்காக மிகை நிதி மேற்கொள்ளப்பட்டதால் அச்செலவின விடயங்களில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டதன் பின்னர் சேமிப்புக்கள் 20 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான அளவினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறிப்பிடப்பட்ட குறைபாடுகளை சீராக்க நடவடிக்கை எடுக்கப்படும் |

### 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பொறுப்பு மீதி ரூபா 6,303,479 ஆக இருந்த போதும் 2019 சனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களின் கொடுப்பனவு உறுதிச்சீட்டுகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்குரிய ரூபா 5,076,153 ஆன செலவினம் பொறுப்பு பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. | பொறுப்புக்கள் பதிவேடு சரியாக நாளதுவரையாக் கப்பட்டு தயாரிக்கப்பட வேண்டியதுடன் அதற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் குறைபாடுகளை சரிசெய்வதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.3 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வைப்புச் செய்யப்பட்ட திகதி முதல் 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட அனைத்து வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் 02 ஆண்டுகள் முதல் 04 ஆண்டுகள் வரை வைப்புச் செய்த | நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இதுவரை அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் இருப்பதுடன் 2019 ஆம் ஆண்டில் அவ்வாறு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |

ரூபா 89,000 ஆன கேள்வி வைப்புக்கள் மற்றும் 02 ஆண்டுகள் முதல் 05 ஆண்டுகள் வரை வைப்புச் செய்த ரூபா 1,773,504 ஆன மூன்றாம் தரப்பினருக்கு செலுத்த வேண்டிய வைப்புக்கள் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 வங்கி கணக்குகளை செயற்படுத்துதல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 மார்ச் முதல் திசெம்பர் வரையான காலப்பகுதிக்குரிய மாதாந்த வங்கிக் இணக்கக் கூற்று 2019 மே 31 ஆந் திகதி வரை தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணம் 395(ஆ) மற்றும் நிதிப் பிரமாணம் 395(இ) பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவித்திருக்க வில்லை. |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2002 செப்தம்பர் 12 ஆம் திகதிய 402 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் மீளாய்வாண்டிற்கான செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறைபாடுகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. நல்லாளுகை**

**4.1 உள்ளக கணக்காய்வு**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
| --- | --- | --- |
| 2011 யூலை 28 ஆந் திகதி முதல் உள்ளகக் கணக்காய்வாளர் பதவி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதும் 2019 ஆகஸ்ட் 31 ஆந் திகதி வரை அப்பதவி வெற்றிடமாக இருந்தது. | நி.பி 133 இன் பிரகாரம் தனது திணைகக்களத்தினுள் உள்ளக கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்பட வேண்டும். | குறித்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது. எதிர்வரும் நடவடிக்கை எமது கட்டுப்பாட்டிற்கு அப்பால் உள்ளது. |